1987 ஏப்ரல் 21]

எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த வகையில் வாடிப்பட்டியை வைத்து ஊராட்சி ஒன்றியம் அமைக்கவேண்டு மென்ற கருத்தைப் பரிசீலிக்கிறோம்.

திண்டுக்கல்லில் புதிய காய்கறி மார்க்கெட்.

424—(* வினா எண் 12315) திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல்லில் போக்குவரத்துக்கு மிகவும் இடையூறாக உள்ள காய்கறி மார்க்கெட்டை மாற்றி புதிதாக மார்க்கெட் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் அமைந்திருக்கக்கூடிய காய்கறி மார்க்கெட் 'ஹார்ட் ஆப் தி சிடி' என்று சொல்லக்கூடிய முறையிலே மிகவும் இடைஞ்சலான இடத்தில் அமைந்திருக்கிற காரணத்தினால் போக்குவரத்து தடைப்படுகின்ற நிலை இருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு விரைவிலே நல்ல ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து இந்தக் காய்கறி மார்க்கெட்டை மாற்றுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மார்க்கெட்டை சிலுவத்தூர் சாலையின் தென் பக்கம் உள்ள அரசு புறம்போக்கு குளத்தில் சுமார் 5 ஏக்கர் நிலத்திலே அமைக்கவேண்டி அவ்விடத்தை நகராட்சிக்கு உரிமை மாற்றம் செய்து கொடுக்க நகரமன்றத்தின் ஒப்புதலுடன் அண்ணா மாவட்ட ஆட்சியாளரைக் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாற்றம் செய்து கொடுக்கப்போவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்காக நான் தொகுதி

மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே குளமாக இருக்கிற இடத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே ஏராளமான குடும்பங்கள்—300 குடும்பங்கள் இருக்கின்றன. அந்தக் குடும்பங்களுக்கு மாற்று இடங்களைத் தருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அந்தக் குடும்பங்கள் பற்றிய விவரம் என்னிடம் இல்லை. அவர் நன்றி சொல்லும்போது அந்த இடம் வெற்றிடமாக இருக்கும் என்று நினைத்தேன். குடும்பங்களையும் அப்புறப்படுத்த வேண்டுமென்றால் அது வேறு பிரச்சனையாக இருக்கிறது. ஆக, எல்லாவற்றையும் பார்த்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

தருமபுரி மாவட்டம், மொரப்பூர் யூனியனில் உள்ள தொட்டம்பட்டி லாஸ்கோ ஸ்டீல் பேக்டரி

425—(*வினா எண் 9647) **திரு. எச். ஜி. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், மொரப்பூர் யூனியனுக்கு உட்பட்ட தொட்டம்பட்டி லாஸ்கோ ஸ்டீல் பேக்டரி மூடப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) இந்தத் தொழிற்சாலையை அரசு ஏற்று நடத்த ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) வாய்ப்பு இல்லை.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது வாய்ப்பு இல்லை என்று சொன்னார்கள். தொட்டம்பட்டி லாஸ்கோ ஸ்டீல் பேக்டரி மூடப்பட்டுள்ளதால் தொழிலாளர்கள் அவதிப்படுகிறார்கள். அவர்கள்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS